# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - தமிழினத் தலைவர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் - அமைதிப் பேரணி!














தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்று (7.8.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் அமைதிப் பேரணியாகச் சென்று சென்னை மெரினாவில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளர் துரைமுருகன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, மு.பெ.சாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழகத்தினர் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.




தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2026) சென்னை – அண்ணா அறிவாலயத்தில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.இராசா, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.